
# பிரதமர் நரேந்திர மோடி இதுவரை பெற்ற 13 சர்வதேச விருதுகள்



பிரதமர் மோடி | கோப்புப்படம்

பிரதமர் நரேந்திர மோடி இதுவரை 13 நாடு களின் உயரிய விருதுகளை பெற்றுள்ளார். அதன் விவரம் வருமாறு:

- தீவு நாடான பப்புவா நியூ கினி, பிரதமர் மோடிக்கு அந்த நாட்டின் மிக உயரிய கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் லோகோஹு' விருதை வழங்கியது
- பிஜி நாட்டின் உயரிய விருதான 'கம்பேனியன் ஆப் தி ஆர்டர் ஆப் பிஜி' பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.
- கடந்த மே மாதம், பலாவ் நாட்டின் அதிபர் சுராங்கல் எஸ். விப்ஸ் ஜூனியர், பிரதமர் நரேந்திர மோடிக்கு 'பலாவ் குடியரசு எபகல் விருதை' வழங்கினார்.
- கடந்த 2021-ம் ஆண்டு டிசம்பரில் பூடானின் மிக உயர்ந்த விருதான 'ஆர்டர் ஆப் தி ட்ருக் கியால்போ'வை பிரதமர் நரேந்திர மோடி பெற்றார்.
- கடந்த 2020 -ம் ஆண்டில் அமெரிக்க அரசு சார்பில் லெஜியன் ஆப் மெரிட்' என்ற விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.
- கடந்த 2019-ம் ஆண்டில், பஹ்ரைன் அரசு சார்பில் பிரதமர் மோடிக்கு 'கிங் ஹமாத் ஆர்டர் ஆப் தி ரினைசன்ஸ்' விருது அளிக்கப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY

- கடந்த 2019-ம் ஆண்டில் மாலத்தீவு அரசு சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு 'ஆர்டர் ஆப் தி டிஸ்டிங்கிஸ்ட் ரூல் ஆப் நிஷான் இசுதின்' விருது வழங்கப்பட்டது.
- கடந்த 2019-ம் ஆண்டில், ரஷ்யாவின் மிக உயரிய விருதான 'ஆர்டர் ஆஃப் செயின்ட் ஆண்ட்ரூ விருது' பிரதமர் நரேந்திர மோடிக்கு அளிக்கப்பட்டது.
- கடந்த 2019-ம் ஆண்டில் ஐக்கிய அரபு அமீரகத்தின் உயரிய விருதான 'ஆர்டர் ஆப் சயீத் விருது' பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- கடந்த 2018-ம் ஆண்டில் பாலஸ்தீனம் சார்பில் பிரதமர் நரேந்திர மோடிக்கு வெளிநாட்டு பிரமுகர்களுக்கான உயரிய விருதான 'கிராண்ட் காலர் ஆப் தி ஸ்டேட் ஆப் பாலஸ்தீன விருது' அளிக்கப்பட்டது.
- கடந்த 2016-ம் ஆண்டில், ஆப்கானிஸ் தானின் மிக உயரிய விருதான 'ஸ்டேட் ஆர்டர் ஆப் காஜி அமீர் அமானுல்லா கான்' பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.
- சவுதி அரேபிய அரசு சார்பில் முஸ்லிம் அல்லாத தலைவர்களுக்கு அந்த நாட்டின் உயரிய கவுரவமான 'ஆர்டர் ஆஃப் அப்துல் அஜீஸ் அல் சவுத்' விருது வழங் கப்படுகிறது. கடந்த 2016-ம் ஆண்டில் இந்த விருது பிரதமர் நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டது.
- தற்போது எகிப்து அரசின் மிக உயரிய விருதான "ஆர்டர் ஆப் தி நைல்" விருது வழங்கப்பட்டிருப்பதன் மூலம் பிரதமர் நரேந்திர மோடி இதுவரை 13 நாடுகளின் சர்வதேச விருதுகளை பெற்றிருக்கிறார்.

இவை தவிர ஐ.நா. சுற்றுச்சூழல் துறையின் உயரிய விருதான தி எர்த் விருது, பில் கேட்ஸ் அறக்கட்டளையின் தூய்மை இந்தியா விருது, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் சர்வதேச எரிசக்தி, சுற்றுச்சூழல் விருது, சியோல் கலாச்சார அறக்கட்டளையின் சியோல் அமைதி விருது உள்ளிட்ட ஏராளமான விருதுகளையும் பிரதமர் நரேந்திர மோடி பெற்றுள்ளார்.

**தரை, வான், கடல் எல்லையை கண்காணிக்க அமெரிக்காவிடம் இருந்து 31 அதிநவீன ட்ரோன்களை வாங்கும் பணி தீவிரம்**



கோப்புப்படம்

**புதுடெல்லி:** அமெரிக்காவின் ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனம் அதிநவீன எம்கியூ-9 ரீப்பர் அல்லது பிரிடேட்டர்-பி ரக ட்ரோன்களை தயாரிக்கிறது. எல்லை கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்த பயன்படும் இது, 40 ஆயிரம் அடி உயரத்தில் தொடர்ந்து 40 மணி நேரம் பறக்கும் திறன் வாய்ந்தது. வானிலிருந்து தரை இலக்கை தாக்கும் ஹெல்பயர் ஏவுகணைகள் மற்றும் ஸ்மார்ட் வெடிகுண்டுகளை ஏந்திச் செல்லும் இவற்றை துல்லிய தாக்குதலுக்கு பயன்படுத்த முடியும். சீனாவிடம் இப்போது உள்ள ஆயுதம் சுமந்து செல்லும் ட்ரோன்களை விட திறன் வாய்ந்தது இந்த எம்கியூ-9.

இந்நிலையில், அமெரிக்காவிடமிருந்து 31 எம்கியூ-9 ரக ட்ரோன்களை வாங்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இந்த திட்டத்துக்கு மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையிலான ராணுவ தளவாட கொள்முதல் குழு கடந்த 15-ம் தேதி ஒப்புதல் வழங்கியது. இந்நிலையில், 31 ட்ரோன்களை வாங்குவது தொடர்பான நடைமுறை ஜூலை மாதம் முறைப்படி தொடங்க உள்ளது. இது தொடர்பான வேண்டுகோள் கடிதம் (எல்ஓஆர்) ஜூலை முதல் வாரத்தில் அமெரிக்க அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என பாதுகாப்புத் துறை உயர் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். இதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்த பிறகு ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

**முப்படைக்கு..** இதில் 15 ட்ரோன்கள் கடற்படை சார்பில் கண்காணிப்புப் பணியில் பயன்படுத்தப்படும். இதுபோல ராணுவம் (தரைப்படை) மற்றும் விமானப்படை சார்பில் தலா 8 ட்ரோன்கள் கண்காணிப்புப் பணியில்

ஈடுபடுத்தப்படும் எனத் தெரிகிறது. இதன் மூலம் நாட்டின் உளவு மற்றும் கண்காணிப்பு திறன் மேம்படுவதுடன் எதிரிகளின் தாக்குதலை முறியடிக்கும் திறனும் அதிகரிக்கும்.

இதன் மொத்த மதிப்பு ரூ.29 ஆயிரம் கோடி ஆகும். முதல் 10 ட்ரோன்கள் ஒப்பந்தம் கையெழுத்தான 2 ஆண்டுகளுக்குள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்படும் எனத் தெரிகிறது. 6 முதல் 7 ஆண்டுகளில் அனைத்து ட்ரோன்களும் ஒப்படைக்கப்படும்.

**இந்தியாவில் தயாரிப்பு:** இந்த ஒப்பந்தத்தின்படி, ட்ரோன்கள் இந்தியாவில் அசம்பிள் செய்யப்படும். இதற்கு தேவையான சில உதிரி பாகங்களை, ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவனம் இந்திய நிறுவனங்களுடன் இணைந்து இந்தியாவிலேயே தயாரிக்கும். மேலும் இந்த ட்ரோன்களை பராமரிப்பது, பழுதுபார்ப்பதற்காக இந்தியாவிலேயே ஒரு தொழிற்சாலையை ஜெனரல் அட்டாமிக்ஸ் நிறுவும். இங்கிருந்து ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளுக்கும் சேவை வழங்கப்படும் எனத் தெரிகிறது.

**சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் வி.பி.சிங்குக்கு முழு உருவ சிலை: முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு**



வி.பி.சிங் | கோப்புப்படம்

**சென்னை:** சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் முழு உருவ சிலை அமைக்கப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார். மறைந்த முன்னாள் பிரதமர் வி.பி. சிங் பிறந்தநாள் நேற்று கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியுள்ளதாவது:

சமூக நீதி காவலர், பிற்படுத்தப்பட்ட மக்களின் கலங்கரை விளக்கமாக திகழ்ந்த முன்னாள் பிரதமர் வி.பி.சிங்குக்கு மரியாதை செய்யும் விதமாக,

சென்னையில் அவரது முழு உருவ கம்பீரச் சிலை அமைக்கப்படும் என்று சட்டப்பேரவையில் விதி 110-ன்கீழ் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த ஏப்.20-ம் தேதி அறிவித்தார்.

உத்தரப் பிரதேச மாநில முதல்வராகவும், மத்தியில் வர்த்தகம், வெளியுறவு, நிதி, பாதுகாப்பு என முக்கிய துறைகளின் அமைச்சராகவும் பதவி வகித்தவர் வி.பி.சிங். பின்னர், தேசிய முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கி 1989-ம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக ஆனார். அவர் பிரதமராக இருந்தது 11 மாதங்கள்தான் என்றாலும், அதற்குள் அவர் செய்த சாதனைகள் மகத்தானவை.

சமூக ரீதியாகவும், கல்வியிலும் பின்தங்கிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்று அழைக்கப்படும் சமூகத்துக்கு அரசு பணியிடங்களில் 27 சதவீத இடஒதுக்கீடு வழங்கலாம் என்ற மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்தினார். தமிழகத்தை தனது ரத்த சொந்தங்கள் வாழும் மாநிலமாக கருதிய அவர், பெரியாரை தனது தலைவராக ஏற்றார். மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியை தனது சொந்த சகோதரர் போல மதித்தவர்.

**பேராசிரியர்கள் வேண்டுகோள்**: அத்தகைய சமூக நீதி காவலருக்கு, ஏற்கெனவே சட்டப்பேரவையில் அறிவித்தபடி, சென்னை மாநிலக் கல்லூரி முன்னாள் மாணவர் பேரவை மற்றும் பேராசிரியர்களின் வேண்டுகோளை ஏற்று, சென்னை மாநிலக்கல்லூரி வளாகத்தில் வி.பி.சிங் முழு உருவ கம்பீரச் சிலை அமைக்க, அவரது பிறந்தநாளில் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் பிறந்த இந்த நாளில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை முன்னேற்றுவதில் உறுதியான அர்ப்பணிப்புடன் இருந்த அப்புரட்சியாளருக்கு என் புகழஞ்சலியை செலுத்துகிறேன். சமூக நீதிக்கான பணியை அச்சமின்றி முன்னெடுத்து, ‘இடஒதுக்கீடு எங்கள் உரிமை’ என அனைவரையும் ஓங்கி முழங்கச் செய்தவர்.

வாய்ப்பு மறுக்கப்பட்டோருக்கு அதிகாரம் அளிக்கும் இலக்கில் வி.பி.சிங்கும், தலைவர் கருணாநிதியும் ஒன்றிணைந்து செயல்பட்டவர்கள். வி.பி.சிங்கின் சிந்தனைகள் மேலும் ஒளிமயமான, சமத்துவமான எதிர்காலத்தை நோக்கி நம்மை தொடர்ந்து வழிநடத்தட்டும்.

இவ்வாறு முதல்வர் தெரிவித்துள்ளார்.